நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 90/2021**

**P.W. 5 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகேஸ்வரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | – |
| கிராமம் | : | பொட்டனேரி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW5** |
| வயது | : | 37 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 13–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3 ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.25 AM

1. நான் தற்போது பொட்டனேரியில் குடியிருக்கிறேன். நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு பழக்கம் இல்லை. ஆனால் பார்த்தால் தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நான் என்னுடைய சொந்த வேலையாக குள்ளமடையானூர் முனியப்பன் கோவில் அருகே வந்தேன். சண்டை நடந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. நான் சென்றுபார்த்தேன். பொன்னுசாமி என்பவர் கையில் அறுவாள் வைத்திருந்தார். தேவகியை வெட்டுவதற்காக ஓடினார். நாங்கள் செல்வதற்குள் அவர் வைத்திருந்த அறுவாளால் தேவகியின் கையில் விசிறிவிட்டார்.

2. அதன்பிறகு எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார். தேவகிக்கு உதவிசெய்துவிட்டு அவருடைய மகனுக்கு தொலைபேசியில் தொடர்புக்கொண்டு தகவல் சொன்னேன். அவர் வந்து தேவகியை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றுவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தேவகி தரப்பினர் எனது உறவினர்கள் இல்லை. அழகம்மாள் என்பவர் எனது தாயார் ஆவார். கந்தன் என்பவர் என்னுடைய தாத்தா ஆவார். தேவகி என்பவர் கந்தன் என்பவரின் தம்பி மனைவி என்றால் எனக்கு தெரியாது. தேவகி என்பவர் என் உறவினர்தான் என்றாலும் வழக்கிற்காக மாற்றி பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.
2. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அதனால் தான் நான் தேவகி யார் என்று தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இன்று சாட்சி சொல்ல வந்திருக்கும் சுதாகர் என்பவர் எனக்கு யார் என்று தெரியாது. சுதாகர் எனது பெரியம்மா மகன் என்றால் சரியல்ல. எனது பெரியம்மா பெயர் கண்ணம்மாள், அவருக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் பெயர் சுதாகர், இரண்டாவது மகன் பெயர் சுரேஷ்.
3. இன்று ஆஜரில் இருக்கும் சுதாகர் எனது பெரியம்மா மகன் தான். சுதாகரும் நானும் ஒன்றாகத்தான் இன்று வந்திருக்கோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் மதியம் 12.00 மணிக்கு சம்பவத்தன்று என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரிக்கும்போதும் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் சொன்னேன்.
4. நான் போலீசாருக்கு போன் செய்யவில்லை. நான் தேவகி என்பவரின் மகன் செங்கோடன் என்பவருக்கு போன் செய்தேன். செங்கோடன் என்பவர் எனக்கு பழக்கம் என்றால் சரிதான். ஆட்டோ டிரைவர் சண்முகம் என்பவர்தான் போன் செய்தார். நான் போன் செய்யவில்லை.
5. செங்கோடன் என்பவர் கால்மணி நேரம் கழித்து சம்பவயிடத்திற்கு வந்தார். செங்கோடன் காரை எடுத்துக்கொண்டு தேவகியை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். நான் ஆட்டோவில் திரும்ப வந்துவிட்டேன். அப்போது காலை சுமார் 09.30 மணியிருக்கும். நான் அதன்பின்னிட்டு பொட்டனேரிக்கு சென்றுவிட்டேன்.
6. மதியம் 12.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு வந்துவிட்டு போலீசார் எனக்கு போன் செய்தார்கள். நங்கவள்ளி காவல் ஆய்வாளர் போன் செய்தார். நான் போன் நெம்பரை கொடுக்கவில்லை. யாரிடம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. நான்

சம்பவயிடத்திற்கு மதியம் 12.10 மணிக்கு போய்விட்டேன். நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது 2 போலீசார் மட்டும்தான் அங்கிருந்தார்கள்.

7. போலீசார் என்ன நடந்தது என்று கேட்டுவிட்டு ஒரு வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கிவிட்டு அனுப்பிவிட்டார்கள். நான் சொன்னவாறு எந்த சம்பமும் நடக்கவில்லை என்றாலும், உண்மையில் தேவகி வகையறாதான் பொன்னுசாமி வகையறாவை தாக்கி விட்டார்கள் என்றாலும், அந்த வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டி தேவகி வகையறாக்கள் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில், உறவினர் என்ற முறையில் என்னை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றாலும், அதனடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.00PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 90/2021**

**P.W.6 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுதாகர் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாரியப்பன் |
| கிராமம் | : | குள்ளமடையனூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW6** |
| வயது | : | 43 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 13–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3 ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.01 PM

1. நான் தற்போது குள்ளமடையானூரில் குடியிருக்கிறேன். நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தேவகி குடும்பமும், பொன்னுசாமி குடும்பமும் சண்டைப்போட்டுக்கொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன். அதுசம்மந்தமாக போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. **(கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எதிரிகள் குடும்பத்திற்கும், புகார்தாரர் குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 29.06.2021 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும், அர்ச்சுணன் என்பவரும் தங்கவேல் விவசாய நிலத்தின் அருகில் பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த போலீசார் எங்கள் இருவர் முன்னிலையில் வழக்கின் விவரங்களை சொல்லி சம்பவயிடத்தை படம் வரைந்து எழுதி படித்துக்காண்பித்த பிறகுதான் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டதற்காக கையெழுத்து செய்தோம்.
2. எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.4 மகேஸ்வரன் எனது சித்தி மகன் ஆவார். தேவகி எனது உறவினர் இல்லை. நான் மேச்சேரியில் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். போலீசார் என்னிடம் வாங்கிய அ.சா.ஆ.2 கையெழுத்தை நான் எனது வீட்டில் வைத்துதான் போட்டேன். என்னுடன் வேறுயாரும் கையெழுத்து போடவில்லை.
2. தேவகி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.15PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**